நேற்று முன்தினம் (12.12.2023) தமிழ்நாட்டிற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய மிக்ஜாம் புயல் வெள்ளச் சேதங்களை ஒன்றிய குழு இணை இயக்குநர் டாக்டர் எ.கே. சிவ் கேர், துணை இயக்குநர் பாவ்யா பாண்டே, தலைமைப் பொறியாளர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் ஸ்டீபன் ஸன் பாலம் பகுதியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நீலகிரி தொகுதி எம்.பி. ஆ.ராசாவின் முயற்சியால்

அவிநாசி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவு!

ரூ.5கோடியே 15 லட்சம் மதிப்பில் துவக்கப்படுகிறது!

நீலகிரி, டிச. 14-

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசாவின் முயற்சியால் அவிநாசி அரசு மருத்துவமனையில் ரூ.5 கோடியே 15 லட்சம் மதிப்பில் மகப்பேறு மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் கட்டிடப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் கட்டிடப்பணிகள் நிறைவடைந்து தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும், கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

இந்த மருத்துவமனை கட்டிடத்தின் மேல் தளத்தில் இரு அறுவை சிகிச்சை அரங்குகளும், மருத்துவர் ஆலோசனை (கன்சல்ட்டிங்) அறையும், தரைத்தளத்தில் ஒவ்வொரு அறைக்கும் 4 படுக்கைகள் என மொத்தம் 16 அறைகளில் 64 படுக்கைகள் அமையும் வண்ணம் கட்டிடப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இந்த மருத்துவமனை கட்டிடத்தில் வெளி நோயாளிகள் பிரிவு மற்றும் நவீன எக்ஸ்ரே, ஸ்கேன் உள்ளிட்ட நவீன மருத்துவ உபகரணங்கள், புத்தம் புதியதாக அமைக்கப்பட உள்ளன. இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகளும் மற்றும் 40 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை கட்டிடமும் அமைக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே 42 படுக்கை வசதியுடன் செயல்பட்டு வருகின்ற அவிநாசி அரசு மருத்துவமனையில் மேலும் கூடுதலாக 64 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவ மனையாக உருவாகியுள்ளது. தற்போது, இந்த மருத்துவ மனையில் தினமும் 600 நோயாளிகள் வெளி நோயாளிகளாக வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்த புதிய மருத்துவமனை கட்டிடம் நிறைவடைந்ததும் 1500 வெளி நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் தரப்பில் கூறும்போது, “விபத்து மற்றும் தலைக்காயம் அறுவை சிகிச்சை பிரிவு, மேலும் 128 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட புதிய அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இந்த கட்டிடப பணிகள் 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் நிறைவடைந்து தமிழக முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று தெரிவித்தனர்.

மிக்ஜாம் புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

கழக மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், 16.12.2023 சனிக்கிழமை அன்று “சிறப்பு மருத்துவ முகாம்கள்” நடைபெறும் என தி.மு.க. மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

தி.மு.க. மருத்துவ அணி

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி, தி.மு.க. மருத்துவ அணிச் சார்பில், மிக்ஜாம் புயல் பேரிடர் பாதித்த சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், 16.12.2023 சனிக்கிழமை அன்று “சிறப்பு மருத்துவ முகாம்கள்” நடைபெறுகிறது.

பொது மருத்துவ பரிசோதனைகள், காலரா தடுப்பு சிகிச்சைகள், டெட்டனஸ் தடுப்பூசிகள், பூஞ்சை தொற்று தடுப்பு சிகிச்சைகள், சேற்றுப்புண் தடுப்பு மருந்துகள், வயிற்றுப்போக்கு தடுப்பு சிகிச்சைகள், பருவ மழைக்கால காய்ச்சல், தொற்று மற்றும் தொற்றா நோய் சிகிச்சைகள் இம்முகாமில் வழங்கப்படும்.

கீழ்க்காணும் பொறுப்பாளர்கள் சிறப்பு மருத்துவ முகாம்களை ஒருங்கிணைப்பார்கள்.

மாவட்டம்	சட்டமன்ற தொகுதி	பொறுப்பாளர்	ஒருங்கிணைப்பாளர்
சென்னை மேற்கு	சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி	கா.சீனிவாசன்	ஜீவகன் அய்யாநாதன்
	ஆயிரம் விளக்கு	க.மோ. ஸ்ரீராம்	
	அண்ணாநகர்	மா.நக்கீரன்	
சென்னை கிழக்கு	அம்பத்தூர்	அன்பு வேலுசாமி	ஜி.சாந்தகுமாரி
	கொளத்தூர்	எஸ்.ஷரவன் குமார்	
	வில்லிவாக்கம்	சி.என்.தருண்குமார்	
	திரு.வி.க நகர்	இ. பிரியதர்ஷினி	
	எழும்பூர்	சி.தயாபிரசாந்த்	
	துறைமுகம்	ஆர்.கார்த்திகேயன்	
சென்னை தெற்கு	சைதாப்பேட்டை	ஏ.துரைராஜ்	அனீஷ்
	வேளச்சேரி	விக்னேஷ் புஷ்பராஜ்	
	மதுரவாயல்	இரா.மு.முபாரக்	
	சோழிங்கநல்லூர்	கணேஷ் வேலுசாமி	
	விருகம்பாக்கம்	வே.ராஜாராஜன்	
சென்னை வடக்கு	பெரம்பூர்	எஸ்.கார்த்திக்	வி.கலைவாணன்
	ராயபுரம்	டி.சுரேந்தர்	
	டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்	என்.ஷாமிலி	
சென்னை தென் மேற்கு	மைலாப்பூர்	இ.ஜனனி	கோ.சக்தி விக்னேஷ்
	தியாகராயநகர்	பி.லட்சுமணன்	
சென்னை வடகிழக்கு	மாதவரம்	ஏ.நிவேதித்தா	து.கோபால்
	திருவொற்றியூர்	ம.கிஷோர்	
காஞ்சிபுரம் வடக்கு	திருப்போரூர்	பி.அதித்தியன்	டி.பி.செந்தில்குமார்
	ஆலந்தூர்	கே.ஷர்மிளா	
	பல்லாவரம்	என். கண்ணன்	
	தாம்பரம்	எம்.எஸ்.லலித்ராஜா தீபன்	
	செங்கல்பட்டு	எஸ்.சுஹாஷினி கர்ணன்	
காஞ்சிபுரம் தெற்கு	உத்திரமேரூர்	எம். சந்தியா	திவாகர் வாசுதேவன்
	செய்யூர்	சி. புகழேந்தி	
	காஞ்சிபுரம்	அன்புசெல்வன்	
	மதுராந்தகம்	எஸ்.அன்பழகன்	
திருவள்ளூர் மத்திய	ஆவடி	சி.கிஷோர் குமார்	ஜி.ராஜேஷ் குமார்
	பூந்தமல்லி	எஸ்.விஜயலட்சுமி	
திருவள்ளூர் மேற்கு	திருத்தணி	இரா.ராஜேந்திரன்	எ.சாம் ஜெபராஜ்
	திருவள்ளூர்	எஸ்.சதீஷ் மணிகண்டன்	
திருவள்ளூர் கிழக்கு	பொன்னேரி	வி. சூரிய பிரகாஷ்	என். வில்சன்

பேரிடர் காலத்தில் தொடர் பணியாற்றிய தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள், அரசு மற்றும் அரசு சாரா களப்பணியாளர்கள், தன்னார்வலர்கள், பாதிப்படைந்த பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களை முகாமிற்கு அழைத்து, பயனடையச் செய்ய வேண்டும் என மருத்துவ அணி நிர்வாகிகளை கேட்டுக்கொள்கிறோம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 27.11.2023

மருத்துவர் **எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. மருத்துவ அணி.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் நேற்று இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உபகோட்டம் நயினார் கோவில் பிரிவிற்குட்பட்ட அ.காட் சான் கிராமத்தில் சுமார் ரூபாய் 7.33 லட்சம் மதிப்பீட்டில் 63 கே வி மின்மாற்றியை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் கு.பாலமுருகன், உதவி செயற்பொறியாளர் புண்ணியராகவன், உதவி மின் பொறியாளர் ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் சக்தி, அண்ணாமலை, காட் சான் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜன் ஒன்றிய கவுன்சிலர் பிரேமா மோகன், ஒன்றிய கவுன்சிலர் இளவரசி மணிவண்ணன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பூர்விகா மலர் செல்வம், கிளைச் செயலாளர் நடராஜன் மற்றும் ஒன்றிய கழக துணை செயலாளர் திலகர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வயல் தெரு, ஐசக் தெரு, யாதவர் தெரு ஆகிய பகுதிகளில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் மற்றும் மேல ஆசாரிபள்ளம் பகுதியில் ரூபாய் 2 லட்சம் மதிப்பீட்டில் பழுதுபட்டுள்ள மழைநீர் வடிகால் ஓடை மறுசீரமைக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ், மண்டல தலைவர்கள் ஜவகர், திருமதி. அகஸ்டினா கோகிலவாணி, செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் பால் தேவராஜ் அகியா, திருமதி. அருள் சபிதா ரெக்ஸலின், திருமதி. ஸ்ரீலிஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சதாசிவன், பகுதி செயலாளர்கள் ஷேக்மீரான், துரை, அணிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் சார்பில்

பெண்களுக்கு எதிரான வன்முறையில் உலகளாவிய போக்குகள்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - பி.கீதாஜீவன் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, டிச.14-

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் சார்பாக 11.12.2023 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டலில் “பெண்களுக்கு எதிரான வன்முறையில் உலகளாவிய போக்குகள்” என்ற தலைப்பின் கீழ் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. இதில் அமைச்சர்கள் மற்றும் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் 20 நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச வல்லுநர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள், பேச்சாளர்கள் கலந்து கொண்டனர். சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அரசு முதன்மை செயலாளர் சுன் சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ்.குமரி, சமூக நல ஆணையர்/தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி வே.அமுதவல்லி மற்றும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின் தொடக்கமாக, பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களால் தமிழ்நாடு அரசின் மகளிர் குறித்த திட்டங்கள், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையசெயல்பாடுகள் மற்றும் மீட்டெடுக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்கள் குறித்த திட்ட விளக்கப்பட கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் திருமதி ஏ.எஸ்.குமரி அனைவரையும் வரவேற்று பேசினார். டாக்டர்.காளிராஜ், இயக்குநர், NCSRC, திருமதி. பிரியங்கா அனுரன்சியா, உலக அழகி, சிங்கப்பூர், கிறிஸ்டோபர் ஹாட்ஷஸ், அமெரிக்க ஐக்கிய தூதரக ஜெனரல் மற்றும் திருமதி. கிளைர் வில்கின்சன், துணை தலைவர், IJM ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அரசு முதன்மை செயலாளர் சுன் சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத் துறையில், மகளிர் உரிமைகளை மேம்படுத்த செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.

சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தமிழ்நாட்டில் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் திட்டங்கள் குறித்தும், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தமிழகத்தில் பெண்களின் உரிமை காக்கும் நடவடிக்கைகளை குறித்தும் பேசினார்கள். மேலும், பெண்ணே இதோ உன் சட்ட உரிமைகள் என்ற புத்தகம் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி அவர்கள் மகளிரின் உரிமைகள் குறித்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக பேசினார்.

பெண்களை முன்னேற்றுவதற்கான தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய செயல் திட்டங்கள் என்ற புத்தகம் மாண்புமிகு சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் அவர்களால் வெளியிடப்பட்டது.

பின்னர், தினந்தோறும் உலக அளவில் பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைகள், அதனை தடுக்கும் முறைகள், காரணங்கள் குறித்து வல்லுநர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டது.

மேலும், சர்வதேச சட்ட வழிமுறைகள், சட்டங்களை அமல்படுத்துதல், சமூகத்தை பயன்படுத்தி குற்றங்களை குறைத்தல், அரசியல் மற்றும் வழிமுறைகளை வலுப்படுத்துதல், குற்றங்களை தடுப்பதற்கான சிறந்த நடைமுறைகள், திருநங்கையர்களை பாதிக்கும் குற்றங்கள், ஆன்லைன் மற்றும் சைபர் கிரைம் குற்றங்கள், தடுப்பதற்கான வழிமுறைகள், பாலியல் கடத்து தல், தடுப்பதற்கான வழிமுறைகள், பாலியல் வியாபாரம், குற்றங்களை தடுத்தல் ஆகியவை வல்லுநர்களால் கருத்துகள் பரிமாறப்பட்டது.

பின்னர் நிறைவு விழா, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.எஸ்.ராமேஷ், திருமதி. பவானி சுப்பராயன், திருமதி. ஆர்.என். மஞ்சுளா ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. மேலும் துறையில் சிறப்பாக பணியாற்றிய பெண்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டப்பட்டது. தேசிய அளவில், மாநில அளவில் மகளிர் அதிகாரம் அளித்ததில் சாதனை புரிந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ் விழாவில் மாநில மனித உரிமை ஆணைய தலைவர், மாநில சட்ட நிறுவன இயக்குநர், கூடுதல் அட்வகேட் ஜெனரல், வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆவுடையார்கோவிலில்

கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 14-

கழக மாநில இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆவுடையார்கோவில் வடக்கு, தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஆவுடையார்கோவிலில் ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும் அறந்தாங்கி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான உதயம் எஸ். சண்முகம், ஆவுடையார் கோவில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வே.பொன் துரை ஆகியோர் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் நிகழ்ச்சியில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் மிசா.சி.இராமநாதன், மாவட்டக் கழக பொருளாளர் உதயம் தாகீர், அறந்தாங்கி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பொன்.கணேசன், மணமேல்குடி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சக்தி.இராமசாமி பொதுக் குழு உறுப்பினர் மஞ்சக்குடி வீரையா, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் உமாதேவி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.சுந்தர பாண்டியன்

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி. விமலாதி ராஜன் , மாவட்ட நெசவாளர் அணி தலைவர் அ.பழனியப்பன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கே.கே.சி.இராமநாதன், ஒன்றிய ஊராட்சி குழு உறுப்பினர்கள் செந்தில்குமரன், அல்லிமுத்து, அய்யாரமேஷ், கமர் நிஷா, கா.அஞ்சலிதேவி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.முத்து காமாட்சி, கே. அண்ணாதுரை தி.வேனிர் செல்வன், இரா.பாரதி ராஜா, ராதா, கே.சுப்பிர மணியன், வி.மதியழகன், ஜெ.சித்திக், ப.கருணாகரன், தகவல் தொழில்நுட்ப அணி அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில் வேலன்

ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆசிரியர் கேசவன், சேவுகபெருமாள், மாணிக்கம், மதியழகன், மு.இந்திரா, நாகராஜ், ஆர்.பாண்டியன், மா.கருப்பையா, வீரசேகர், கே.வேலுச்சாமி, தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் போஸ்.வினோதன், க.கார்த்திக், ச.அபிநயா, சி.கற்பகம் சந்திரசேகர் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணி தலைவர்கள், துணை தலைவர்கள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அதிகரிக்கும் கொரோனா: பொதுமக்களுக்கு சிங்கப்பூர் அரசு எச்சரிக்கை!

சிங்கப்பூர், டிச.14-

உலகையே உலுக்கிய கொரோனா பாதிப்பு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது. ஆனால் சிங்கப்பூரில் இதற்கு நேர்மாறாக உள்ளது. அதாவது கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அங்கு 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். மேலும் சுவாசம் தொடர்பான நோய்கள் நாடு முழுவதும் அதிகரித்து வருகின்றன. இதனால் அங்குள்ள மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது. எனவே கொரோனா தொற்று பரவலை தடுக்க கூட்ட நெரிசலான இடங்களை தவிர்த்தல், முகக்கவசம் அணி தல், கொரோனா தடுப்பூசி போடுதல் உள்ளிட்டவற்றை தீவிரப்படுத்த வேண்டும் என அந்த நாட்டின் சுகாதார அமைச்சகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.

இந்த சூழலில் சிங்கப்பூர் மருத்துவமனைகள் நாட்டில் கொரோனா நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், சமீபத்திய தொற்று அலைகளைத் தொடர்ந்து தேவைப்பட்டால் அவற்றின் திறனை அதிகரிக்கத் தயாராக இருப்பதாகவும் மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மோகனூர் ப.சின்னு
டிசம்பர் 14 (1995)



திராவிட இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வட்டப் பிரதிநிதி, துணைச் செயலாளர், கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து, மோகனூர் பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்

சேலம் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராகவும் – மோகனூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த கறுப்புக் கொடி, இலங்கைத் தமிழர், கைலாசம் கமிஷன் எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.